**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 33/2021**
**நாள்.23.03.2026**
**வா.சா.2- மோகனவேல்**
**த/பெ - நல்லதம்பி**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதியை தெரியும்.

3. தாவா சொத்துகள் ஆதியில் கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கான ஆவணத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

4. அந்த ஆவணத்தை பார்த்திருந்தால் சர்வே எண்.294ல் கிழக்கு புறத்தில் 200 அடி நீளம், 20 அடி அகலத்திற்கு பாதை செல்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது.

5. கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோருக்கு எப்படி தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் வாரிசு என்ற அடிப்படையில் அவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது. கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோரின் அப்பா மற்றும் தாத்தா ஆகியோரை தெரியாது என்றால் சரிதான். கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோர் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, எனக்கு நன்கு விவரம் தெரிய அவர்கள் இறந்துவிட்டார்கள்.

6. கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோரின் வாரிசுகள் அதே ஊரில் தான் வசிக்கிறார்கள்.

7. கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோர் வாரிசுகளை அழைத்து பாதை உள்ளதா என்பதை பற்றி விசாரிக்க வேண்டும் என்றால் சரிதான். விசாரிக்க வேண்டும். கரவண்டராயர் மற்றும் வெள்ளையன் செட்டியார் ஆகியோரின் வாரிசுளின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியும், கரவண்டராயரின் மகன் சிங்கம், தற்போது முடியாத நிலையில் உள்ளார். வெள்ளையன் செட்டியாரின் வாரிசுகளில் ஒருவர் இறந்துவிட்டார் மற்ற இருவர் முடியாத நிலையில் உள்ளனர்.

8. தற்போது எனக்கு 59 வயதாகிறது. வாதி பெரியசாமிபிள்ளையிடமிருந்து 1991ம் ஆண்டு சர்வேஎண்.293/7க்கு கட்டுப்பட்ட நிலத்தை கிரையம் பெறும்போது நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான், என் அப்பா கையொப்பம் இட்டுள்ளார், நான் உடனிருந்தேன்.

9. அந்த ஆவணத்தில் சர்வே எண்.294க்கு கிழக்கே 200 அடி நீளம், 20 அடி அகலத்திற்கு செல்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. வா.சா.ஆ.6 ஆவணத்தை காட்டி மேற்படி சர்வே எண்.294க்கு கிழக்கே 200 அடி நீளம் மற்றும் 20 அடி நீளத்திற்கு செல்கிறதா என்பது குறித்து காட்ட சொன்னபோது சாட்சி இன்று நான் கண்ணாடி கொண்டுவரவிலை என்பதால் என்னால் வாசிக்கமுடியவில்லை என்று கூறினார்.

**எனவே வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**